# சிக்கண்ணா
# அரசு கலைக் கல்லூரி
## திருப்பூர் - 641 602

## CHIKKANNA GOVERNMENT ARTS COLLEGE, TIRUPPUR

**(Affiliated to Bharathiar University, Coimbatore)**

**(NAAC Re-accredited with B Grade)**






# கல்லூரி ஆண்டு மலர்

# 2014 - 2015

**(கல்வியாண்டு)**

# ஆண்டு மலர்

## கல்வி ஆண்டு

## 2014 - 2015

**வெளியிடுபவர்**

பேரா. முனைவர் ப.ஜெயலட்சுமி, M.Com.,M.Phil.,PGDCA.,Ph.D.,

முதல்வர்

**பதிப்பாசிரியர்**

பேரா. முனைவர் இரா.இந்திராணி, M.A.,M.Phil.,B.Ed.,Ph.D.,

தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர்

**Statement required under section 5(2) of the Press and Regulation of Books Act, 1867**

**Form - I**


**(Rules – 3)**


| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | - | Tiruppur |
| 2. | Period of its Publication | - | Annual |
| 3. | Printer's Name and Address | - | Kalaimagal Offset Printers<br>84, West Car Street,<br>Avinashi,<br>Tiruppur (Dt). |
| 4. | Publisher's Name, Nationality and Address | - | Prof. Dr. P. Jayalakshmi<br>Indian,<br>Principal,<br>Chikkanna Government Arts College,<br>Tiruppur - 641602. |
| 5. | Editor's Name, Nationality and Address | - | Prof. Dr. R. Indirani<br>Indian,<br>Assistant Professor of Tamil,<br>Chikkanna Government Arts College,<br>Tiruppur-641602. |

I Prof. Dr. P. Jayalakshmi, hereby declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Tiruppur

**Prof. Dr. P. Jayalakshmi**
**Principal**





# மலர்க்குழு

**வெளியீட்டாளர்**

பேரா. முனைவர் ப. ஜெயலட்சுமி

**பதிப்பாளர்**

பேரா. முனைவர் இர்ா. இந்திராணி


**உறுப்பினர்கள்**

பேரா. முனைவர் எம்.கே.விநாயகமூர்த்தி

பேரா. முனைவர் நா. பாலசுப்பிரமணியன்

பேரா. இரா. செங்கமுத்து


**மலரின் வாசம் நுகரும் முன்...**



இது -
2014 - 2015 ஆம் ஆண்டிற்குரிய மலர்

ஓராண்டு நடப்பின் பதிவுகளும்
மாணவ மாணவியர் தம் படைப்புகளும்
இதன் உள்ளடக்கம்.

இதன் வேரும் விழுதுமாக
பூக்களும் கனிகளுமாக
கவிதைகள் கட்டுரைகள்
கதைகள் ஓவியங்கள்
துணுக்குகள்...
இன்னும் பல...



இக்கல்லூரிக் கண்ணாடியில்
முகம் பார்க்க வாருங்கள்...
நீங்களும் தெரியலாம்...

மலர் துளிர்விட
அன்புநீர் ஊற்றிய
அனைவருக்கும் நன்றி...

அன்புடன்
**இரா. இந்திராணி**
பதிப்பாசிரியர்

# முதல்வர்





## பேரா. முனைவர் ப. ஜெயலட்சுமி



# பணி நிறைவு பெறும் பேராசிரியர்

பேரா. பொ.ரா. குமார்
தலைவர், இயற்பியல் துறை



# NAAC Report Preparation Committee

## Professors



Dr.P.Jayalakshmi
Principal – NAAC Convenor



Dr.Haresh M. Pandya
IQAC – Co-ordinator



Dr.G.M.Nasira
RUSA – Co-ordinator



Dr.S.David Soundararajan



Dr.R.Jayachandran



Dr.G.B.Karthikeyan



Mrs.A.Geetha



Dr.A.Mohankumar




Dr.N.Sampathkumar



Dr.P.Rajarajeshwari



Dr.M.Gopi



Dr.B.Kanagaraj



Dr.I.Jayalakshmi



Dr.R.Nirmala Devi



Dr.A.Margarat



Mrs.R.Pradeepa

# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்

## ஆண்டறிக்கை 2014–2015

எங்கள் கல்லூரியில் ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. கல்வியாண்டின் இறுதியில் ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டு நிறைவு விழாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

ஆண்டு முழுவதும் கல்வி, கலை, விளையாட்டு போன்றவற்றில் சிறப்புற்று விளங்கும் மாணவ–மாணவியர்க்கு இவ்விழாவில் பரிசும், பாராட்டும், சான்றிதழ்களும் வழங்கப்படும். அந்த வகையில் இக்கல்வியாண்டு முழுவதும் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை உங்களிடத்திலே தொகுத்து வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

*1967*ல் தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் தற்போது 12 இளநிலை, 7 முதுநிலை மற்றும் M.Phil., Ph.D. ஆகிய பட்ட வகுப்புகளில் 2630 மாணவ–மாணவிகள் பயின்று வருகின்றனர். கடந்த ஆண்டு வணிகவியல், கணினிஅறிவியல், வேதியியல், கணிதவியல் ஆகிய துறைகளில் முழுநேர M.Phil., மற்றும் Ph.D. வகுப்புகள் துவங்க அரசிடமிருந்து ஆணை பெற்று துவக்கப்பட்டுள்ளது.

2015 பிப்ரவரி 4, 5, 6 ஆகிய தேதிகளில் இக்கல்லூரிக்கு தேசிய தர நிர்ணயக்குழு தர நிர்ணயம் செய்ய வந்தது. இக்கல்லூரிக்கு 2.77 என்ற மதிப்பெண் அளவில் B Grade அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த NAAC வருகைக்காக அயராது உழைத்த எம் கல்லூரி பேராசிரியர்களை இந்நேரத்தில் மனதாரப் பாராட்டுகின்றேன். மேலும் இக்குழு வருகைக்கு உறுதுணையாக இருந்த முன்னாள் மாணவர் அமைப்பு மற்றும் சமூக ஆர்வலர்களை இந்நேரத்தில் பாராட்டுகின்றோம்.

மேலும் இக்குழு வருகையொட்டி பொதுப் பணித் துறை பல்வேறு பணிகளை செய்து கல்லூரி வளாகத்தை சுத்தப்படுத்த ஏற்பாடு செய்ததையும் இந்நேரத்தில் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் 2015 ஜீன் மாதம் பொன்விழா ஆண்டு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் துறைசார்ந்த நிகழ்வுகளைத் தொகுத்து வழங்குகிறேன்.

## தமிழ்த்துறை

தமிழ்த்துறையில் 26.09.2015 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் திரு.த.ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "அறிவை விரிவு செய்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

தமிழ்த்துறை சார்பாக மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பேச்சு, கவிதை, கட்டுரை, நடனம், ஓவியம், யோகா போன்ற கலைகளில் ஆர்வமுள்ள மாணவர்களை கல்லூரிக்குள் தேர்வு செய்து பிற கல்லூரிகளின் கலை நிகழ்வுகளுக்கு பங்கேற்க அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

பின்னல்புக் டிரஸ்ட் & பாரதி புத்தகாலயம் இணைந்து நடத்திய "12வது திருப்பூர் புத்தகத் திருவிழா 2015" இல் நடைபெற்ற கலை இலக்கியப் போட்டிகளில் மாணவர்கள் பலர் பங்கேற்றனர். அதில் பரிசு பெற்று வந்தோர் விவரம்.

**கட்டுரைப் போட்டியில் (மாவட்ட அளவில்)**

1. சீ.சதீஸ்குமார் - இயற்பியல் துறை 2ம் ஆண்டு ஆறுதல் பரிசு பெற்றார்

**ஓவியப் போட்டியில் (மாவட்ட அளவில்)**

1. க.சதீஸ்குமார் - BCA 2ம் ஆண்டு முதல் பரிசு பெற்றார்
2. மு.முத்துக்குமார்- M.Sc இயற்பியல் துறை ஆறுதல் பரிசு பெற்றார்
3. அர.லோகேஷ்குமார்- B.Sc இயற்பியல் துறை ஆறுதல் பரிசு பெற்றார்

## ஆங்கிலத்துறை

கல்லூரி ஆங்கிலத் துறையின் சார்பாக நமது கல்லூரியின் அனைத்துத் துறை மாணவ மாணவியர்க்கும் பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் நடத்தப்பட்டது. ஆங்கில இலக்கியம் பயிலும் மாணவ மாணவியர்க்கு வினாடி வினா, ஓவியம், கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. துறையின் ஆங்கில இலக்கிய மன்ற விழா 13-03-2015 அன்று சிறப்புற நடந்தேறியது. அதில் திருப்பூர் LRG அரசு மகளிர் கலைக் கல்லூரி, ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் N.விஜயசாமுண்டீஸ்வரி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "Psychological Approval to Shakespeare" என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள். ஆங்கிலத் துறை மாணவ மாணவியர் Eco Club மற்றும் Rotract Clubல் பல்வேறு ஆக்கபூர்வ செயல்களில் ஆர்வமுடன்

பங்கேற்றனர். துறை ஆசிரியர்கள் பல்வேறு பயிற்சிப் பட்டறைகளிலும் க
பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துப் பிரசுரித்துள்ளனர்.

## வரலாற்றுத்துறை

வரலாற்றுத் துறை சார்பாக 20-09-2014 அன்று வரலாற்று மன்
கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கோவை PS
கல்லூரி தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் S.ரவி
விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இத்துறையில் 2
உலக சுற்றுலா தின விழாவும், 31-10-2014 அன்று வல்லபாய்பட்டேலின்
தேசிய ஒருமைப்பாட்டு தினமாகவும் கொண்டாடப்பட்டது. மேலும்
மாணவர்கள் R.சூரியன். மற்றும் K.குறலரசன் ஆகிய இருவரும் பாரதிய
அளவில் 8 மற்றும் 10ம் இடங்களைப் பெற்று கல்லூரிக்கும் து
சேர்த்துள்ளனர். இத்துறையின் முதலாம் ஆண்டு மாணவன் R.ராகு
பல்கலைக் கழக அளவில் மூன்றாவது இடம் பெற்றுள்ளார். மேலும் வர
சேர்ந்த 6 மாணவ மாணவியர்கள் வேலூர் VIT பல்கலைக் கழகத்தில் ந
செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பான நான்காம் நாள் பயிற்சி முகாமில்
இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். மூன்றாம் ஆண்டு மாண
மற்றும் சுற்றுலா பாடங்கள் தொடர்பாக விஜயமங்கலம், தாரமங்கலம் மற்
இடங்களில் 23-08-2014 அன்று கள ஆய்வை மேற்கொண்ட
கல்வியாண்டில் மாணவர்கள் தேர்ச்சி சதவீதம் UG.78% என்பதைத் தெரி

## கணிதத்துறை

முன்னாள் மாணவர்கள் சங்கம் சார்பாக அனைத்து வகுப்புகள்
மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், மூன்றாம் ஆ
மற்றும் இரண்டாம் ஆண்டு முதுகலை மாணவர்களுக்கு பாராட்டு
வழங்கப்பட்டது. மேலும் 100% மதிப்பெண் பெற்றவர்களுக்கு ரூ.100
இந்த கல்வி ஆண்டில் கணிதத் துறை ஆராய்ச்சி படிப்புகளுக்கு (M.Ph
பாரதியார் பல்கலைக் கழகத்தில் ஒப்புதல் பெறப்பட்டு M.Philல் 17 மா
01 மாணவரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2013-2014ம் கல்வியாண்டில் மாணவர்கள் தேர்ச்சி சதவீதம் UG
என்பதைத் தெரிவிக்கலாகிறது. மேலும் இந்த ஆண்டு நடைபெற்ற ப
கணிதத் துறையில் 11 இளங்கலை மாணவர்களும், 04 முதுகலை ம
பெற்றுள்ளனர்.

கணிதத் துறை சார்பாக வினாடி வினா போட்டி மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் அனைத்து ஆசிரியர்களும் தமது துறை சார்பாக பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்கில் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். எங்கள் துறை மாணவர்கள் பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

## இயற்பியல் துறை

இத்துறையில் DRDO மூலம் ரூ.3 லட்சம் கூடுதல் தொகை Projectக்காக பெறப்பட்டுள்ளது. இரண்டு பயிற்சி மாணவர்களுக்கு தலா ரூ.60000/- வீதம் கூடுதல் உதவித் தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது. Xerox Machine ரூ.80000/- செலவில் பெறப்பட்டுள்ளது.

2014–15 மாணவர் சேர்க்கை

- 1 Year (UG) - 24 மாணவர்கள்
- 1 Year (PG) - 30 மாணவர்கள்

ஆய்வகத்திற்கு ரூ.64000/- அரசு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. 2013-2014ம் கல்வியாண்டில் மாணவர்கள் தேர்ச்சி சதவீதம் UG 100% & PG 100% என்பதைத் தெரிவிக்கலாகிறது. துறைத் தலைவர் பேரா.பொ.ரா.குமார் இந்த கல்வியாண்டில் ஓய்வு பெறுகிறார். 30 ஆண்டுகளாக துறையில் சிறப்பாக பணியாற்றி பேராசிரியர் ஓய்வு பெறவுள்ளார். அவர்களுக்கு எங்கள் துறையின் பாராட்டுகள் வாழ்த்துக்கள் தெரிவிக்கலாகிறது.

## வேதியியல் துறை

இவ்வாண்டு இளங்கலை வேதியியலில் 48 மாணவர்கள் (14 மாணவிகள் உட்பட) சேர்ந்தனர். முதுகலை வேதியியலில் 16 மாணவர்கள் (5 மாணவிகள் உட்பட) சேர்க்கப்பட்டனர். இக்கல்வி ஆண்டில் Ph.D ஆராய்ச்சி பட்டபடிப்பில் இரண்டு மாணவர்களும் M.Phil. பட்டபடிப்பில் 3 (2 மாணவிகள் உட்பட) மாணவர்களும் சேர்ந்தனர். ஆகஸ்ட் மாதம் பாரதியார் பல்கலைக்கழக இறுதி தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. முதுகலை வேதியியலில் முதன்முதலாக பட்டத்தினை பெற்று வெளி செல்லும் (2012 - 2014) முதல் அணி மாணாக்கர்கள் முதல் மூன்று இடங்களைப் பெற்று இத்துறைக்கு பெருமை சேர்த்தனர். இளநிலை அறிவியலில் ஒரு மாணவர் 9வது இடத்தினை பெற்றார். 16.10.2014 அன்று வேதியியல் மன்றம் Chembee-Chikkanna Chemistry Club ($C^3$) என்று பெயரிடப்பட்டது. இதனை ஒட்டி வினாடி வினா போட்டி இளங்கலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டது.

டிசம்பர் 5 & 6 அன்று நிர்மலா கல்லூரியில் நடைபெற்ற தேசிய அறிவியல் கழகம் மற்றும் இந்திய அறிவியல் நிறுவனம் (IISc) இணைந்து நடத்திய 2 நாள் அறிவியல் சிறப்பு பட்டயப் பயிற்சி வகுப்பில் 15 முதுகலை 2ஆம் ஆண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர். 30.12.2014 அன்று நடைபெற்ற ஜி.வி.ஜி விசாலாட்சி கல்லூரியில் பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் ஒரு நாள் கருத்தரங்கில் முனைவர் கனகாச்சலம் உட்பட 5 மாணவர்கள் கலந்து கொண்டனர். 21.01.2015 அன்று நடைபெற்ற முன்னாள் மாணவர் சங்கக்குழுமத்தில் சுமார் 40 முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

23.01.2015 அன்று நடைபெற்ற வேதியியல் மன்ற விழாவில் பேராசிரியர் டி.ஜானகிராமன் (முன்னாள் வேதியியல் துறைத் தலைவர், ஜமால் முகமது கல்லூரி) கலந்து கொண்டு குவாண்டம் வேதியியல் பற்றி சிறப்புரையாற்றினார். 27.01.2015 அன்று நடந்த மாசு பற்றிய விழிப்புணர்வு பேரணியில் அனைத்து வேதியியல் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். தங்கள் துறைக்கு பிப்ரவரி 5, 2015 அன்று தேசிய தரஆய்வு மற்றும் நிர்ணயக்குழு (NAAC) வந்து சென்றது.

14, 15.09.2015 அன்னை தெரசா பல்கலைக்கழகம் கொடைக்கானல் கருத்தரங்கில் முனைவர் சீ. கார்த்திகேயன் கலந்து கொண்டார். ஜமால் முகமது கல்லூரியில் 09.02.2015 அன்று நடைபெற்ற கருத்தரங்கிற்கு தலைமை தாங்கினார். பிப்ரவரி 18 & 19 2015 அன்று காருண்யா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய அறிவியல் கழகம் மற்றும் இந்திய அறிவியல் நிறுவனம் (IISc) இணைந்து நடத்திய 2 நாள் அறிவியல் சிறப்பு பட்டயப்பயிற்சி வகுப்பில் 16 முதுகலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் முனைவர் சு.ப. ராஜாசிங், முனைவர் ந.சம்பத்குமார், முனைவர் பெ.விஜயன், முனைவர் மா.சிவதயாநிதி ஆகிய பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். பிப்ரவரி 19 & 20 2015 அன்று கோவை அரசு கலைக் கல்லூரியில் பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கில் முனைவர் சு.ப. ராஜாசிங், முனைவர் பெ.விஜயன், முனைவர் மா.சிவதயாநிதி உட்பட 3 மாணவர்கள் கலந்து கொண்டு ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்பித்தனர்.

06.03.2015 அன்று பெண்கள் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற கோலம் மற்றும் தீயின்றி செய்யும் சமையல் போட்டிகளில் முதுகலை மாணவிகள் பங்குபெற்று இரண்டிலும் முதல் பரிசை தட்டிவந்தனர். இத்துறையைச்சார்ந்த பேராசிரியர்கள் முனைவர் சு.ப. ராஜாசிங் (11.07.2014), முனைவர் ந.சம்பத்குமார் (02.01.2015), முனைவர் பெ.விஜயன் (02.02.2015), முனைவர் சீ.கார்த்திகேயன் (17.02.2015) ஆகியோர் பிற அரசு கலை மற்றும் அறிவியல்

கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாற்றினர். 27.02.2015 மற்றும் 30.03.2015 ஆகிய தேதிகளில் முனைவர் சீ.கார்த்திகேயன் அவர்களின் 2 மாணவர்களுக்கு இத்துறையில் Ph.D வாய்மொழித்தேர்வு நடைபெற்றது.

இக்கல்வி ஆண்டில் துறையைச்சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 20 ஆராய்ச்சி கட்டுரைகளை சர்வதேச மற்றும் தேசிய சஞ்சிகைகளில் வெளியிட்டனர்.

## விலங்கியல் துறை

விலங்கியல் துறையில் 2014-15ம் ஆண்டு நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகள் பின்வருமாறு.

1. விலங்கியல் துறையின் Student Association Meeting 07-01-2015 திருப்பூர் மாவட்ட துணைக் காவல் ஆணையாளர் திரு.திருநாவுக்கரசு அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புரை ஆற்றினார்கள்.
2. சுற்றுப்புறத்தின் தூய்மை மற்றும் மாசு கட்டுப்பாடு என்ற முறையில் கல்லூரி வளாகத்தில் Eco-Club மூலமாக இருநூறு மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. மரக்கன்று நடும் விழா திருப்பூர் மாவட்ட Rotary Club தலைவர் மற்றும் உறுப்பினர் மூலமாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் தலைமை தாங்கி, விலங்கியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆ.மோகன்குமார் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.
3. கொசுக்கள் மூலமாக பரவும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் பணியில் விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் ஆ. மோகன்குமார் தலைமையில் திருப்பூர் மாநகராட்சியுடன் இணைந்து கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு நில வேம்பு கசாயம் மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டது. இந்த அரும்பணியை தொடங்கி வைத்தவர் திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் சு.குணசேகரன் அவர்களும் கல்லூரி முதல்வரும் ஆவர்.
4. பாரதியார் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் விலங்கியல் இரண்டாம் ஆண்டு முதுகலை மாணவ மாணவியர்களுக்கு கோவையில் உள்ள மாசு கட்டுப்பாட்டு வாரிய ஆய்வகம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சிறுவாணி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற இடங்களுக்கும் 06-03-2015 அன்று ஒரு நாள் சுற்றுலா பயணமாக பேராசிரியர் அ. மார்கரெட் மற்றும் பேராசிரியர் ச.செந்தில்நாதன் தலைமையில் அழைத்துச் செல்லப்பட்டது.
5. பாரதியார் பல்கலைக்கழக பாடத்திட்டத்தின் அடிப்படையில் விலங்கியல் துறையில் இளங்கலை விலங்கியல் மூன்றாம் ஆண்டு, முதலாம் ஆண்டு மற்றும் முதுகலை

முதலாம் ஆண்டு மாணவ மாணவிகளை ஒரு நாள் கல்விப் பயணமாக குன்னூரில் உள்ள வெறிநாய்க்கடி ஆராய்ச்சி மையத்திற்கு முனைவர் ஆ. மோகன்குமார் தலைமையில் அழைத்துச் செல்லப்பட்டது.

## ஆடை வடிவமைப்பு மற்றும் நாகரீகத் துறை

முனைவர் K.A.விஜயகுமார் (Managagement Operations) S.G.S.Pvt. Ltd., திருப்பூர் அவர்கள் மாணவர்களிடமிருந்து தொழிற்சாலையின் எதிர்பார்ப்புகள் என்ற தலைப்பில் 10.09.2014 அன்று உரையாற்றினார். மேலும் ஆடை வடிவமைப்பு மற்றும் நாகரீகத் துறையின் மன்றத்தினையும் துவக்கி வைத்தார்.

எமது துறை மூலமாக மகளிர் குழுவுக்கு மாணவர் வாயிலாக கை வேலைப்பாடு பயிற்சி வழங்கப்பட்டது.

டாக்டர்.ச.கற்பகம் சின்னம்மாள், துறைத் தலைவர், அவினாசி லிங்கம் பல்கலைக் கழகம், கோவை மற்றும் பான் செக்கர்ஸ் கல்லூரி, தஞ்சாவூர் முதலிய கல்லூரிகளில் ஆடை வடிவமைப்புத் துறை சார்பாக நடைபெற்ற கருத்தரங்குகளில் சிறப்புரையாற்றினார்.

மேலும் அனைத்து ஆசிரியர்களும் தமது துறை சார்பாக பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்கில் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர்.

கொங்கு கலை அறிவியல் கல்லூரி, கோவையில் நடைபெற்ற Poster Presentationல் இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவிகளான V.சசிதீபா மற்றும் R.மைதிலி ஆகியோர் இரண்டாம் பரிசு பெற்றுள்ளனர்.

A.சோபனா மனிதவள துறை சார்பாக நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பங்கேற்று முதல் பரிசை வென்றுள்ளார்.

## கணினி அறிவியல் துறை

இத்துறையில் Soft Skill Programme – Individual Development (ID) Programme JCI மூலம் 7 மண்டல பயிற்சியாளர்களைக் கொண்டு 400 மாணவ–மாணவியருக்கு Body Language, Public Speaking and Presentation Skills, Group Discussion, Goal Setting, Appearing for interview, Preparing CV போன்ற தலைப்புகளில் "FUTURE – 2013" என்ற நிகழ்ச்சி 12.07.2013 மற்றும் 13.07.2013 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

13.08.2013 அன்று மூன்றாமாண்டு மாணவ–மாணவியர்க்கு "PHP & MYSQL" என்ற தலைப்பிலும், 12.09.2013 அன்று "Software Testing" என்ற தலைப்பிலும் கருத்தரங்குகள் நடைபெற்றன. 06.02.2014 அன்று கணினி மன்றத் துவக்க விழா நடைபெற்றது. மாணவ–மாணவியரின் திறன் மேம்பாட்டிற்காகவும், இறுதி நிலை மாணவ–மாணவியரும் பயன்பெறும்

வகையில் 13.02.2014 அன்று "PEER TEAM" அமைக்கப்பட்டது. ICTACT – Operations அமைப்பைச் சார்ந்த H. ANAND அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு இதனைத் தொடங்கி வைத்தார்.

SC-ST மற்றும் முதல் தலைமுறை மாணவ–மாணவியருக்காக 21.02.2014 அன்று "TRAIN UR BRAIN" என்ற நிகழ்ச்சி மண்டலப் பயிற்சியாளர் JC. S. Harish Kumar அவர்களால் நடத்தப்பட்டது. கடந்த கல்வியாண்டிலிருந்து கணினிப் பயன்பாடு (BCA) பட்ட வகுப்பும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

## வணிகவியல் துறை

2014-2015ஆம் கல்வியாண்டில் வணிகவியல் துறையில் இளம் வணிகவியல் பிரிவில் 210 மாணவ, மாணவிகளும் முதுகலை வணிகவியல் பிரிவில் (M.Com, M.Com (IB) 80 மாணவ, மாணவிகளும் M.Phil ஆராய்ச்சி முழு நேர பிரிவில் 16 மாணவ, மாணவிகளும் பகுதி நேர பிரிவில் 5 பேரும், Ph.D முழு நேர பிரிவில் 01 மாணவரும், பகுதி நேர பிரிவில் 9 மாணவர்களும் சேர்ந்து படித்து வருகின்றனர். வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் G. வேணுகோபால் ரூ.6,09,800/- க்கான Major Research Projectஐ முடித்து UGCக்கு சமர்ப்பித்துள்ளனர்.

ஜீலை 2014ல் திருப்பூரில் உள்ள Bright Commerce Career Academy மற்றும் SR Trade Win ஆகிய நிறுவனங்களுடன் மாணவர்களின் முன்னேற்றத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இக்கல்வியாண்டின் துவக்கத்தில் முனைவர் M.குணசேகரன் உடுமலை அரசு கலைக் கல்லூரியிலிருந்தும், முனைவர் B.ராஜசேகரன் தஞ்சை சரபோஜி அரசினர் கல்லூரியிலிருந்தும் மாற்றலாகி வணிகவியல் துறையில் சேர்ந்துள்ளனர்.

முனைவர் ஆர்.நாராயணசாமி பாரதியார் பல்கலைக் கழக Graduate Senate உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இத்துறையின் தொழில் முனைவோர் பயிற்சி முகாம் Entrepreneurial Development Programme Cell பிரிவும், தமிழக அரசின் MSMEDம் சேர்ந்து 02-03-2015 முதல் 06-03-2015 வரை அரசின் உதவித் தொகையுடன் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்று இறுதியில் 20 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முனைவர் கே.பொங்கியண்ணன் இக்கல்வியாண்டில் France மற்றும் Japan ஆகிய வெளி நாடுகளில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்குகளில் நமது துறை சார்பாக கலந்து கொண்டு ஆராய்ச்சி கட்டுரை சமர்ப்பித்துள்ளார். கடந்த டிசம்பர் மாதம் ஒடிசாவில்

நடைபெற்ற All India Commerce Congress கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆராய்ச்சி கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

Dr. C.தர்மராஜ், Dr. G.B.கார்த்திகேயன், Dr.G.சந்திரசேகரன், Dr.G.வேணுகோபால் மற்றும் Dr.K.பொங்கியண்ணன் ஆகிய பேராசிரியர்கள் இக்கல்வியாண்டில் Refresher Course முடித்துள்ளனர்.

வணிகவியல் துறையின் பேராசிரியர்கள் மற்றும் M.Phil / Ph.D ஆராய்ச்சி மாணவ, மாணவிகளும் இக்கல்வியாண்டில் பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற தேசிய கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆராய்ச்சி கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

K.பிரபாகரன் II M.Com (IB) மற்றும் சதீஸ்குமார் II M.Com ஆகிய மாணவர்கள் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 25-02-2015 அன்று நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளில் கலந்து கொண்டு பல்வேறு பரிசுகளை பெற்று வந்துள்ளனர்.

இக்கல்வியாண்டில் 6 Ph.D ஆராய்ச்சி மாணவர்களுக்கு வாய்மொழி தேர்வு முடித்து முனைவர் பட்டம் பெற்றனர். 7 M.Phil ஆராய்ச்சி மாணவர்களுக்கு வாய்மொழி தேர்வு முடிந்து M.Phil Degree பெற்றனர். 6 Ph.D ஆராய்ச்சி மாணவர்கள் Synopsis சமர்ப்பித்துள்ளனர்.

இக்கல்வியாண்டில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் UG 95 மாணவர்களும், PG 47 மாணவர்களும் பட்டம் பெற்றனர்.

## நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டத்தில் இக்கல்லூரியில் 4 அலகுகள் செயல்பட்டு வருகிறது. மரக்கன்றுகள் நடுவது, ஏற்கனவே உள்ள மரக்கன்றுகளை பராமரிப்பது, பல்வேறு விழிப்புணர்வு பேரணிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தியது இவ்வாண்டின் செயல்பாடுகள் ஆகும். YRC சார்பில் மார்ச் மாதம் VIT Vellore கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் இக்கல்லூரி மாணவர்கள் 6 பேர் கலந்து கொண்டனர்.

## விளையாட்டுத்துறை

நமது கல்லூரியின் விளையாட்டுத்துறை இயக்குநராக தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் திரு.இரா.செங்கமுத்து அவர்கள் மார்ச் 2015ல் புதியதாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். கல்லூரியில் இந்த ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் 18-03-2015 அன்று சிறப்பாக நடைபெற்றன. அதற்கான பரிசுகள் இவ்விழாவில் வழங்கப்பட்டது. ஆண்டு முழுவதும் பல்வேறு கல்லூரிகளிலும் அமைப்புகளிலும் நடைபெறுகின்ற விளையாட்டுப்

போட்டிகளில் நமது மாணவர்கள் பங்கேற்று பல்வேறு பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற்று வருகின்றனர்.

## தேசிய மாணவர் படை

இக்கல்வியாண்டில் நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவ மாணவியர் சிறப்பாக செயல்பட்டு பல்வேறு முகாம்க்ளில் கலந்து சிறப்பு செய்துள்ளனர்.

2 ஆகஸ்ட் 2014ம் முதல் 11 ஆகஸ்ட் 2014ம் நாள் வரை நமது கல்லூரியில் தேசிய மாணவர் படை முகாம் நடைபெற்றது. இதில் கோவை மண்டல அளவில் உள்ள பள்ளி, கல்லூரி தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்கள் சுமார் 800க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இரண்டாம் ஆண்டு இளங்கலை வணிகவியல் துறையை சார்ந்த J.மணிகண்டன் என்ற மாணவர் திருச்சியில் நடைபெற்ற மாநில அளவிலான தால்சானிக் முகாமில் பங்கேற்றார்.

இரண்டாம் ஆண்டு இளம்கலை ஆடை வடிவமைப்பு துறையை சார்ந்த C.சங்கர் என்ற மாணவர் உடுமலைப் பேட்டையில் நடைபெற்ற மாநில அளவிலான தேசிய மாணவர் படை மாணவ, மாணவியருக்கான விளையாட்டு போட்டியில் பங்கேற்றார்.

தேசிய மாணவப் படையின் மண்டலங்களுக்கு இடையேயான குடியரசு தின விழா அணிவகுப்பு சார்ந்த போட்டிகள் திருநெல்வேலியில் உள்ள புனித ஜான் மேல்நிலைப் பள்ளியில் 27 செப்டம்பர் 2014 முதல் 06 அக்டோபர் 2014 வரை நடைபெற்றது. அதில் நமது கல்லூரி தேசிய மாணவர் படை அதிகாரியும் மற்றும் 3 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

15 அக்டோபர் 2014ம் தேதியன்று திருப்பூர் மாநகரில் புகையிலை ஒழிப்பு சார்ந்த பேரணி நடைபெற்றது. அதில் நமது கல்லூரி சார்பாக 65 தேசிய மாணவர் படை மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். இப்பேரணியை திருப்பூர் மாநகர காவல் துறை இணை ஆணையர் திரு.திருநாவுக்கரசு IPS அவர்கள் தொடங்கி வைத்தார்.

தேசிய ஒருமைப்பாடு முகாம் இராஜஸ்தானில் உள்ள ஜெய்சல்மார் என்ற இடத்தில் 28 அக்டோபர் 2014 முதல் 8 நவம்பர் 2014 வரை நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சார்ந்த இருவர் கலந்து கொண்டனர்.

சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த நாள் கொண்டாட்டம் நமது கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அதில் நமது கல்லூரி முதல்வர் முனைவர்.ப.ஜெயலட்சுமி அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இதில் 64 தேசிய மாணவர் படை மாணவ மாணவியர் பங்கேற்றனர்.

மதுரையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பு முகாமில் இளம்கலை வணிகவியல் மாணவர் A.திலீப்குமார் அவர்கள் கலந்து கொண்டார்.

3 டிசம்பர் 2014 முதல் 12 டிசம்பர் 2014 வரை புனேயில் நடைபெற்ற சத்ரபதி சிவாஜி மலையேறும் பயிற்சி முகாமில் நமது கல்லூரி சார்பாக 5 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய தர நிர்ணயக்குழு கடந்த மாதம் 4 பிப்ரவரி 2015 முதல் 6 பிப்ரவரி 2015 வரை நமது கல்லூரிக்கு வருகை புரிந்தனர். அவர்களுக்கு நமது கல்லூரி தேசிய மாணவர் படை சார்பாக கார்டு ஆப் ஹானர் கொடுக்கப்பட்டது. .

5 மார்ச் 2015 அன்று கோவை பிஎஸ்ஜி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை விழாவில் நமது கல்லூரி தேசிய மாணவர் படை அதிகாரி மற்றும் 5 மாணவர்கள் கலந்து கொண்டனர். கோவை மண்டலத்தில் இவ்வாண்டு சிறப்பாக செயல்பட்ட நமது கல்லூரியின் 5 தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

கோவையில் உள்ள மதுக்கரை கப்பற்படை துப்பாக்கி சுடும் தளத்தில் நடைபெற்ற சிறந்த துப்பாக்கி சுடும் தேசிய மாணவர் படை மாணவ மாணவியருக்கு இடையேயான போட்டியில் நமது கல்லூரியை சேர்ந்த 3 மாணவர்கள் மற்றும் 1 மாணவியும் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

29 மார்ச் 2015ல் கோவையில் நடைபெற்ற "தூய்மை இந்தியா" திட்டத்தில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## சுற்றுச்சூழல் பசுமை இயக்கம்

26.02.2014 அன்று சுற்றுச்சூழல் பசுமை இயக்கம் இக்கல்லூரியில் துவக்கப்பட்டது. கோவை சிறுதுளி அமைப்பின் தலைவர் திருமதி வனிதா மோகன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கல்லூரி வளாகத்தை தூய்மையாக வைத்திருப்பதையும், மரங்களை நட்டு பேணி வளர்ப்பதையும் இவ்வியக்கம் கொள்கையாக கொண்டுள்ளது. 20.03.2014 அன்று உலக பறவைகள் தினம் கொண்டாடப்பட உள்ளது.

## வேலைவாய்ப்புத் துறை

நமது கல்லூரியின் வேலைவாய்ப்புத் துறை அதிகாரியாக விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் எ. மோகன்குமார் அவர்கள் செயல்பட்டு வருகிறார். இந்த கல்வியாண்டில் 31 வேலை வழிகாட்டி நிகழ்ச்சிகள் மாணவர்களுக்காக நடத்தப்பட்டு உள்ளன. பல மாணவ–மாணவிகளுக்கு முழு நேர மற்றும் பகுதி நேர வேலைவாய்ப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 100 மாணவ–மாணவிகளுக்கு உதவித் தொகையுடன் Retail Management என்ற இலவசப் பயிற்சி வகுப்பு Wisdom Foundation மூலமாக நடத்தப்பட்டது.

மாணவர்கள் காவல்துறை நண்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 214 மாணவ–மாணவிகளுக்கு IL & FS Education & Technology Services Ltd., Chennai என்ற அமைப்பினால் வேலைவாய்ப்பு மற்றும் மேலாண்மை பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டது. 50 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மாணவ–மாணவிகளுக்கு ஆங்கிலத்தில் பேசுவதற்கான பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டது.

## நூலகம்

பல ஆண்டுகளாக கல்லூரியில் காலியாக இருந்த நூலகர் பணியிடத்தில் கடந்த .03.2014 அன்று முனைவர் எ. சித்ராதவப்புதல்வி அவர்கள் நூலகராகப் பணியில் சேர்ந்துள்ளார். இவரது நூலகப் பணியைப் பாராட்டி ஆகஸ்ட் 2014ல் SALIS என்ற அமைப்பு National Best Young Librarian Award 2012" என்ற பட்டமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கினார்கள்.

கல்லூரி நூலகம் வணிக மென்பொருள் மற்றும் Barcode மூலம் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இதில் UGC INFLIBNET வழங்கும் N-List என்னும் Database மூலம் சுமார் 80000 E-Books மற்றும் 3000 E-Journals Access வசதி செய்யப்பட்டுள்ளது. இதனை Internet Protocol மூலம் கல்லூரி வளாகம் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளலாம். ICT (Information and Communication Technology) based நூலகச் சேவையை செப்டம்பர் 2014ல் திரைப்படப் பாடலாசிரியர் மற்றும் கவிஞர் திரு.அறிவுமதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்கள்.

வாசிப்புத் திறனை மேம்படுத்தும் முயற்சியில் புதிய தலைமுறை TV Channelலும் SALIS அமைப்பும் இணைந்து நவம்பர் 2014ல் தமிழகம் முழுவதும் நடந்த விழிப்புணர்வுப் பேரணியின் செயலாளராக கோவை அமைப்பில் இவர் செயல்பட்டுள்ளார். கல்லூரி நூலகத்தின் சேவையில் தினமும் 100லிருந்து 150 பயனாளிகள் பயன்பெறுகிறார்கள்.

பொதுப்பணித்துறையின் சார்பாக ரூ.30,00,000/– செலவில் மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கான கழிப்பறை கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

## தமிழ் சுவாசம்


இரா.இராஜசேகரன், முதலாம் ஆண்டு முதுகலை கணிதம்



இலக்கியங்களுக்கு இமையானவளே
இதிகாசங்களுக்கு இடையானவளே
புராணங்களை பொன் வளையலாய் அணிந்தவளே
உன்னை போற்றுவது எவ்வாறு?
என் செந்தமிழின் சிறப்பை உரைக்க
சீர்மிகு இக்காலம் போதாது
என் பைந்தமிழின் பெருமையை விளக்க
நம் பாரதியின் புகழ் ஒன்றே போதும்
தென்றலாய் வீசும் என் தெய்வ தமிழின்
தன்மையை விளக்கி கூற
திரு.வி.க வின் திறல் ஒன்றே போதும்
சிறந்த நம் தமிழ் சீர் பெற
அத்தமிழை சுவாசித்து தமிழோடு வாழ்வோம்...

## என் தேசம்

இரா.சங்கர், கணினி அறிவியல் துறை உதவிப் பேராசிரியர்




விதை முதல்
உரம் வரை
வேளாண்மையில்
ஊழல் - என் தேசம்

காய்கறிகளை
கடைத்தெருவிலும்
காலனிகளை
கண்ணாடிக் கூண்டிலும்
விற்பனை - என் தேசம்


கல்விக்
கடனுக்கு
கண்ணீரை
சிந்தச் செய்யும் - வங்கிகள்

என் சோறுக்கு மட்டும்
[illegible]த் தட்டும் - என் தேசம்




[illegible]க்
[illegible]க் கூட
[illegible]கள்_
ஆம்
[illegible]த் தகுந்தாற்போல்
[illegible] - என் தேசம்

பாசங்கள் கூட
எங்கு போட
[illegible]கின்றன... உறவுகள்
ஆம்
ஒட்டாத உறவுகளாய் - என் தேசம்



வேலியே
பயிரை மேய்ந்தது... ஆம்
இன்று
கல்வியும் களவுபோனது
வாட்ஸ் அப்பில் - என் தேசம்



<u>குறுங்கவிதைகள்</u>

உபதேசம்
நட்ட
மரங்களெல்லாம்
வெட்டியபின்...
மழை வேண்டி
மரம் நடுவோம்

சிகரெட்
என்னைக்
சொல்லாமல்
கொல்லும்
உயிர் நண்பன்...



**ஆபத்து**

பெண்ணே
கட்டுப்பாடே
இல்லாத சுதந்திரமும்...
சுதந்திரமே இல்லாத
கட்டுப்பாடும்
பேராபத்து...

**சாபம்**

கருகாத
கள்ளச் செடிகள்
கருகட்டும் - பெண்சிசு

**அலைபேசி**

உலகம்
உன் கையில்
கர்வத்துடன்... ஒலித்தது


**உறுப்பு தானம்**

இறந்தும்
உயிர்...
வாழ்கின்றாய்...
இறைவனாய்...
யாரோ வீட்டில்...

**தன்னைத் தானே அழித்துக்கொள்ள**

அலைபேசி...
பேஸ் புக்...
வாட்ஸ் அப்...
ட்டிவிட்டர்...
சிகரெட்...




D.TAMILSELVAN II.B.Sc.CDF

## மொழி

இரா.இராஜசேகரன், முதலாம் ஆண்டு முதுகலை கணிதம்



புவனம் போற்றும் மொழியினை உடையவளே
உன் கன்னித் தன்மையால்
பல கவிஞர்களை உருவாக்கினாய்.
உன் மென் தன்மையால்
பல மேதைகளை உருவாக்கினாய்
நானும் வாழ்ந்துவிட்டேன்
உன் நயனம் கண்டு
நீ செந்தாமரையில் அவதரித்தவளா என்றேன்
உன் செவ்வியல் தன்மைகளை கண்டு
தாய்க்கு பின் தான் அனைத்தும் என்பர்
என் தாய்மொழியே நீ அவளுக்கு முதன்மையானவள்
வாழ்க என் தாய்மொழி

## கருப்பொருள்

எஸ்.ரமேஷ், இரண்டாம் ஆண்டு முதுகலை கணிதம்



என் கவிதைகள்
இலக்கணத்தைத் தொட
விரும்பவில்லை
ஏன் தெரியுமா?
உன்னை விட
இலக்கணத்தில்
சிறந்த
கருப்பொருள் எது?




D.TAMILSELVAN.
III.B.SC.,CDF

**தேசிய மாணவர் படை**

இக்கல்வியாண்டில் நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவ
செயல்பட்டு பல்வேறு முகாம்களில் கலந்து சிறப்பு செய்துள்ளனர்.

2 ஆகஸ்ட் 2014 முதல் 11 ஆகஸ்ட் 2014 வரை நமது கல்லூரியில்
முகாம் நடைபெற்றது. இதில் கோவை மண்டல அளவில் உள்ள பள்ளி, கல்லூ
படை மாணவ மாணவியர்கள் சுமார் 800க்கும் அதிகமானோர் கலந்து கொண்ட


இரண்டாம் ஆண்டு இளங்கலை வணிகவியல் துறையை சார்ந்த J
மாணவர் திருச்சியில் நடைபெற்ற மாநில அளவிலான தால்சானிக் முகாமில் பங்

இரண்டாம் ஆண்டு இளம்கலை ஆடை வடிவமைப்பு துறையை சா
மாணவர் உடுமலைப் பேட்டையில் நடைபெற்ற மாநில அளவிலான தேசிய மா
மாணவியருக்கான விளையாட்டு போட்டியில் பங்கேற்றார்.

தேசிய மாணவர் படையின் மண்டலங்களுக்கு இடையேயான குடியர
சார்ந்த போட்டிகள் திருநெல்வேலியில் உள்ள புனித்ஜான் மேல்நிலைப்பள்ளி
2014 முதல் 06 அக்டோபர் 2014 வரை நடைபெற்றது. அதில் நமது கல்லூரி
அதிகாரியும் மற்றும் 3 மாணவர்களும் கலந்து கொண்டனர்.




4 TAMILNADU BATTALION NCC
COIMBATORE
WELCOME
NATIONAL CADET CORPS
AIDS AWARENE


08/08/2014 12:07

# துறை சார்ந்த நிகழ்வுகள்

## ஆடை வடிவமைப்பு மற்றும் நாகரீகம்


- முனைவர் K.A.விஜயகுமார் (Manager – Operations) SGS Pvt. Ltd. திருப்பூர் அவர்கள் ”மாணவர்களிடமிருந்து தொழிற்சாலையின் எதிர்பார்ப்புகள்” என்ற தலைப்பில் 10-09-2014 அன்று உரையாற்றினார். மேலும் ஆடை வடிவமைப்பு மற்றும் நாகரீகத் துறையின் சங்கத்தினையும் துவக்கி வைத்தார்
- எமது துறை மூலமாக மகளிர் குழுவுக்கு மாணவர்கள் வாயிலாக கைவேலைப்பாடு பயிற்சி வழங்கப்பட்டது






CHIKKANNA GOVERNMENT ARTS COLLEGE
DEPARTMENT OF COSTUME DESIGN & FASHION
05.02.2014





வாழ்க்கையில் நம்பிக்கை
இருக்கணும்!!!!!!
யாரையும் நம்பித்தான்
இருக்கக்கூடாது...



## விடாமுயற்சி

**எஸ்.ரமேஷ், இரண்டாம் ஆண்டு முதுகலை கணிதம்**


சிறுவிதை கூட
மண்ணை முட்டி
முளைக்கிறது
தோல்வி விதைகளால்
உன் கனவு
விதைகளை
தூக்கியெறிந்து விடாதே
விடாமுயற்சியென்னும்
ஏர் கொண்டு உழு
வெற்றி விதை
இந்த விண்ணைத்
தொட்டு முளைக்கும்



## நம்பிக்கை

**பி.சௌடேஸ்வரி, மூன்றாம் ஆண்டு இளங்கலை விலங்கியல்**

நம்பிக்கையோடு முதல் அடி
எடுத்து வை
முழு படிகட்டையும்
பார்க்க வேண்டிய
அவசியமில்லை
முதல் படியில் ஏறு
நம்பிக்கையுள்ள மனிதனுக்கு
எப்போதும் ரோஜா தான்
கண்ணில் படும் முட்கள் இல்லை




கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை

- திருவள்ளுவர்



கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும்.
அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு
எதுவும் இல்லை.




# CHIKKANNA GOVERNMENT ARTS COLLEGE, TIRUPPUR

**(Affiliated to Bharathiar University, Coimbatore)**

**(NAAC Re-accredited with B Grade)**

**Phone :** 0421-2242152

**Fax :** 0421-2246600

**E-Mail :** cgactpr@gmail.com

**Website :** www.cgac.in